1972 மார்ச் 9]

கல்லூரிகளில் அரிசன மாணவர்களுக்கான இடங்கள்

* 384 வினா—**திரு. ந. சோமசுந்தரம்** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய 18 சதவிகிதம் நிரப்பப்படுகிறதா என அறிய ஒரு குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பல தனியார் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களைக் கொடுக்காமலும், மாணவர்கள் விரும்பிக் கேட்கின்ற பாடங்களின் பிரிவைக் கொடுக்காமலும், அறிவியல் பாடம் கேட்டால் சரித்திரப் பாடத்தையும், சரித்திரம் கேட்டால் வணிக இயல் பாடத்தையும் கொடுக்க முன்வருகிறார்கள். எனவே இந்தக் குறைகளை நிவர்த்திக்க ஒரு குழு அமைத்து அரசாங்கம் பரிசீலனைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அத்தனையும் நிரப்பப்படுகின்றனவா என்று அறிய டைரக்டர் ஆஃப் கலிஜியேட் எட்யூக்கேஷன், நலத்துறை இயக்குநர் ஆகியோரிடம் கேட்கப்பட்டது. அவர்கள் எல்லாக் கல்லூரிகளிலும் பரிசீலனை செய்து, பல தனியார் கல்லூரிகளிலும், அரசாங்கக் கல்லூரிகளிலும் ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களும் நிரப்பப்படவில்லை என்று தெரிவிக்கிறார்கள். அதற்குக் காரணம், மாணவர்கள் விரும்பிக் கேட்கின்ற பாடத்தில், அவர்களுக்குப் போதுமான திறமை இருக்கிறதா என்பதைப் பார்த்துதான் அந்தப் பாடம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட பாடத்தில் திறமை போதாவிட்டால், வேறு பாடம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்கு மாணவர்கள் ஒத்துக் கொள்ளாததே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. கூடுமான வரையிலும் ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களையும் நிரப்புவதற்கு டைரக்டர் ஆஃப் கலிஜியேட் எட்யூக்கேஷன், நலத்துறை இயக்குநர் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் சரியாக ஒதுக்கப்படுவதில்லை என்று புகார் சொல்லப்படுகிறது. அப்படி எத்தனை அரசாங்கக் கல்லூரிகள், எத்தனை தனியார் கல்லூரிகளில் இந்த 18 சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் நிரப்பப்படாத கல்லூரிகளைக் கூறுகிறேன். அரசாங்கக் கல்லூரிகளில் பிரி-யூனிவர்சிட்டி இங்கிலிஷ் மீடியத்தில் 6 கல்லூரிகளில் தரப்படவில்லை. பி.யு.சி. தமிழ் மீடியத்திலும் 6 கல்லூரிகளில் தரப்படவில்லை. பி.இ. ஒரு கல்லூரியில் தரப்படவில்லை. பி.ஏ. தமிழ் மீடியம் 5 கல்லூரிகளில் தரப்படவில்லை. பி.எஸ்ஸி. ஒரு கல்லூரியில் தரப்படவில்லை. பி.எஸ்ஸி. தமிழ் மீடியம் 5 கல்லூரிகளில் தரப்படவில்லை. பி.டி. இங்கிலிஷ் மீடியத்திற்கு யாரும் அப்ளிக்கேஷன் போடவில்லை. பி.டி. தமிழ் மீடியம் இரண்டு கல்லூரிகளில் தரப்படவில்லை. அதே போன்று சில தனியார் கல்லூரிகளிலும் தரப்படவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : What is the percentage of reservation made for the scheduled caste students in Government colleges and also private-managed colleges?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனியார் கல்லூரியானாலும், அரசாங்கக் கல்லூரியானாலும் எல்லாக் கல்லூரிகளிலும் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸ்பீக்கர் சார் ; அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து பல அரசாங்கக் கல்லூரிகளில் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதைக் கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ? பாதிக்கப்பட்ட மாணவர்களின் கதி என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அதைப்பற்றி பரிசீலனை செய்யும்படி டைரக்டர் ஆஃப் கலிஜியேட் எட்யூக்கேஷன், நலத்துறை இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அவர்களின் பரிசீலனை

1972 மார்ச் 9]

யிலிருந்து, மாணவர்கள் கேட்கின்ற பாடத்தில் போதிய அளவுக்கு மார்க் வாங்கியிருந்தால்தான் அந்தப் பாடம் கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் வாங்கியிருக்கக்கூடிய மார்க்கின் அடிப்படையில் வேறு பாடம் கொடுத்தால் அதை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுகிறார்கள். இங்கிலிஷ் மீடியம் கேட்பவர்கள் ஆங்கிலத்தில் போதிய மார்க் வாங்கியிருக்க வேண்டும். தமிழ் மீடியம் கேட்பவர்கள் தமிழில் போதிய மார்க் வாங்கியிருக்க வேண்டும். அப்படியானால்தான் மாணவர்களின் விருப்பப்படி கல்லூரி முதல்வர்கள் சப்ஜெக்ட் கொடுக்கிறார்கள். இல்லையென்றால் கொடுக்கப்படுவதில்லை. அதனால்தான் எல்லா இடங்களும் நிரப்பப்பட முடியவில்லை என்று சொல்கிறார்கள்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 385 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக நிலங்களை கையகப்படுத்த திருச்சி மாவட்டத்திற்கு 1971-72-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுவரை ரூ. 1,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. பெ சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வீட்டுமனை வழங்குவதற்கு, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட பணம் பெரும்பாலும் செலவழிக்கப்படாமல் இருப்பதற்கு, நிலங்களை ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஆவதே காரணம் என்ற புகார் சொல்லப்படுகிறதே. எனவே, நிலங்களை ஆர்ஜிதம் செய்வதில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நிலத்தை கையகப்படுத்துவதில் தாமதமாகிறது என்றக் காரணத்தினால் ஒதுக்கப்பட்ட பணம் திருப்பி அனுப்பப்படவில்லை. பூராவும் செலவழிக்கப்படுகிறது. ஒரே ஒரு முறைதான் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப்படாமல் இருந்தது. ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப்பட